Publication: Tamilaka News	Pg No: 3
Edition – Print	Date – 21.09.2021

Who is going to win the SEOY Award 2021

'சமூக தொழில்முனைவோர்' விருதினை வெல்லப்போவது யார்

சென்னை, செப். 21: உலக வர்த்தக மன்றத்தின் கிளை அமைப்பான ஸ்வாப் ஃபவுண்டேஷன் ஃபார் சோஸியல் ஏண்ட்ர்ப்ரெனர்ஷிப் மற்றும் ஜுபிலன்ட் பார்சியா அறக்கட்டளை, ஜுபிலன்ட் பார்சியா குழுமத்தின் ஒரு இலாப நோக்கமற்ற அமைப்புடன் இணைந்து இன்று 12வது இவ்வாண்டின் சமூக தொழில்முனைவோர் (SEOY) விருது இந்தியா 2021 விருதிற்காண இறுதிப் போட்டியாளர்களை அறிவித்தது.

(SEOY) விருது இந்தியா 2021 விருதிற்காக இறுதிப் போட்டியாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாற்றல் மிக்க சமூகத் தொழில் முனைவோர்கள் பின்வருமாறு:

1. அபர்ணா ஹெக்டே, ஆர்ம்மன்; www.arm-man.org , 2. சீமா பிரேம், ஃபியா குளோபல்; www.fiaglobal.com, 3. பிரன்ஷு சிங்கால், கரோ சாம்பவ்; www.karo-sambhav.com, 4.சுச்சின் பஜாஜ், உஜாலா சிக்னஸ்; www.ujalacyg-nus.com .

SEOY விருது, பல்வேறு துறைகளில் பெரிய அளவிலான, உன்னதமான அமைப்பு ரீதியிலான மாற்றங்களை ஏற்படுத்துவதில் உள்ள சவால்களை எதிர்கொள்ளவும், உள்ளடக்கிய வளர்ச்சியை உண்டாக்குவதிலும் உறுதியுள்ளம் கொண்டிருக்கும் வெற்றிகரமான சமூக தொழில்முனைவோரை அங்கீகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. SEOY விருதை வென்றவர், சமூக தொழில்முனைவிற்கான ஸ்வாப் ஃபவுண்டேஷன் ஃபார் சோஸியல் ஏண்ட்ர்ப்ரெனர்ஷிப் வுடன் இணைந்த உலகின் மிகப்பெரிய செல்வாக்குள்ள சமூக நிறுவனங்களின் நெட்வொர்க்கில் இணைவார்.

பல்வேறு துறைகள் மற்றும் பின்னணியைச் சேர்ந்த தொழிற்துறை ஜாம்பவான்கள் மற்றும் தனித்துவம் கொண்ட பிரபலங்கள் அடங்கிய ஒரு சிறந்த நடுவர் குழு, விருதிற்கான இறுதி வெற்றியாளரைத் தேர்ந்தெடுக்கும். 'சமூக தொழில்முனைவோர்' விருது இந்தியா 2021 க்கான வெற்றியாளர் அக்டோபர் 7, 2021 வியாழக்கிழமை ஒரு மெய்நிகர் விழாவில் அறிவிக்கப்படுவார்.

SEOY விருது இந்தியா 2021, மார்ச் 2021 இல் விண்ணப்பங்களுக்காக திறக்கப்பட்டது. இந்தியாவின் 28 நகரங்களிலிருந்து பெண் சமூக தொழில்முனைவோர்கள் 28 நபர்கள் உட்பட 100 க்கும் மேற்பட்ட வெவ்வேறு விதமான சமர்ப்பிப்புகளைப் பெற்றது.